6 மே 27, 2012
தினகரன் மாம்பலம் சன்டே

சங்கர நேத்ராலயா அகடமியில்

# புதிய டிப்ளமோ படிப்பு

சங்கர நேத்ராலயா மெடிக்கல் ரிசர்ச் பவுண்டேஷனில் பிளஸ் 2 முடித்த மாணவர்களுக்கு டிப்ளமோ இன் ரெஃப்ரேக்ஷன் மற்றும் டிஸ்பென்சிங் பாடம் கற்றுக் கொடுக்கப்படுகிறது.

கடந்த 34 ஆண்டுகளாக சங்கர நேத்ராலயா மருத்து வமனை கண் மருத்துவ சிகிச்சையில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. தற்போது சங்கர நேத்ராலயா அகடமியின் கீழ் செயல்பட்டு வரும் சங்கர நேத்ராலயா மெடிக்கல் ரிசர்ச் பவுண்டேஷன் பிளஸ் 2 படித்த மாணவர்களுக்கு டிப்ளமோ இன் ரெஃப்ரேக்ஷன் மற்றும் டிஸ்பென்சிங் என்ற கல்வியை அளிக்க உள்ளது.

இதில், கண் பாதிப்படைந்தவர்களுக்கு நவீன தொழில் நுட்ப வசதியுடன் சிகிச்சை அளிக்கும் முறை குறித்து கற்றுக்கொடுக்கப்படுகிறது. மேலும் கண் நோய்களுக் கான அறிகுறி மூலம் அதன் மூல காரணத்தை கண்டு பிடித்து சிகிச்சை அளிப்பது குறித்தும் இந்த படிப்பில் பயிற்றுவிக்கப்படுகிறது. அனுபவமிக்க ஆசிரியர்களால் பல்வேறு புதிய கருத்துக்களுடன் வகுப்புகள் நடத்தப்படு கிறது.

சிறந்த ஆய்வகம் மூலம் செய்முறை கல்வி கற்றுக் கொடுக்கப்படுகிறது. இந்த படிப்புக்கு கட்டணமாக ஆண் டுக்கு ரூ. 20 ஆயிரம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. படித்த உடன் சங்கர நேத்ராலயா மருத்துவமனையில் வேலை உறுதி.

தகுதிகள்: மத்திய அல்லது மாநில கல்வி வாரியத்தில் பயின்று பிளஸ் 2 தேர்ச்சி பெற்றவராக இருக்க வேண்டும் அல்லது அதற்கு நிகராக இயற்பியல், வேதியியல், கணக்கு மற்றும் உயிரியலில் அதிக மதிப்பெண் பெற்ற வராக இருத்தல் வேண்டும்.

* 17-20 வயதுக்குட்பட்டவராக இருக்க வேண்டும். 1.5.2012 அன்று 17 வயது நிரம்பியவராக இருத்தல் வேண் டும். தொடர்புக்கு: 97104 85295, 044 4308 4111.
இமெயில் :- mahali@snmail.org.
வெப்சைட்:- www.thesnacademy.ac.in